## இலங்கை மன்றம் - 2016

இலங்கை மன்றத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புகளையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1973 இன் 31 ஆம் இலக்க இலங்கை மன்ற அதிகாரச்சட்டத்தின் 13(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(அ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கை 2017 யூலை 14 இல் மன்றத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை மன்றத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

(அ) சொத்தொன்றின் நியாயமான பெறுமதி அதன் கொண்டு செல்லும் பெறுமதியிலிருந்து பொருண்மையானதாக மாற்றமடையும் போது மீள்மதிப்பீடு மேற்கொண்டு மீள் மதிப்பீட்டுப் பெறுமதியில் கணக்குகளில் சீராக்கப்பட வேண்டிய போதிலும், காணிகள் மற்றும் கட்டிடங்கள் தவிர்ந்த ரூபா 57,093,384 கிரயமான நிலையான சொத்துக்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 34,225,505 கிரயமான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை கணக்கீடு நியமம் 03 இன் பிரகாரம் மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பாடநெறிகளிலிருந்தான வருமானம் நிறுவகத்தால் நடாத்தப்பட்ட பாடநெறிகளின் காலப்பகுதியை கருத்திற்கொள்ளாமல் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. அதனால், கணக்காய்வு தெரிவுச் செவ்வையில் உட்படுத்தப்பட்ட 04 பாடநெறிகளிலிருந்தான வருமானம் கணக்குகளில் ரூபா 818,250 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மன்றத்தின் கடன்பட்டோரா் மீதி ரூபா 17,216,836 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 399,578 தொகையான கடன் மீதிகள் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும், ரூபா 6,262,434 தொகையான கடன்பட்டோர் மீதிகள் 1 முதல் 5 வருடங்கள் வரையிலான காலமும் காணப்பட்டது.

(ஆ) 15 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 551,863 தொகையான சம்பளங்கள் மற்றும் ஏனைய படிகளையும் முன்னறிவித்தலின்றி சேவையை விட்டுச்சென்ற 3 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 18,750 பண்டிகை முற்பண மீதியையும் அறிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்.** | |
| (i) நிதிப்பிரமாணம் 757 | 2016 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு சபையின் அறிக்கைகள் 2017 யூன் 15 இலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571 | 3 வருடங்களை மிஞ்சிய காலப்பகுதியின் ரூபா 207,333 தொகையான பிடிகாசு வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைகள்** | |
| அத்தியாயம் XII இன் 16.1.2 ஆம் பிரிவு | வெளிநாட்டில் படிப்பதற்காக தொடர்ச்சியான காசற்ற விடுமுறையாக அதிகூடிய காலப்பகுதியாக 3 வருடங்கள் இருந்த போதிலும், மற்றைய ஆண்டின் காலப்பகுதிக்கான காசற்ற விடுமுறை 03 வருடங்கள் கடந்த பின்னர் விரிவுரையாளரின் சார்பாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |
| **(இ) 2016 பெப்ரவரி 12 இன் 2/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை** | |
| 05 ஆம் பந்தி | 2013/2014 ஆம் ஆண்டுகளில் கடன்பட்டோர்களின் கீழ் காட்டப்பட்டிருந்த வருமானமாக இனங்காணப்பட்ட ரூபா 2,617,029 தொகை பாடநெறி கட்டணங்களை அறவிடாமையினால் திறைசேரியின் அனுமதியில்லாமல் மீளப்பெறப்பட்டிருந்தது. |

**2.5 போதிய அதிகாரத்தால் ஆதரவளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

4.2 சதவீத வட்டியுடன் ரூபா 252,780 இலிருந்து ரூபா 526,560 வீச்சிலான இடர் கடன்கள் மன்றத்தின் 05 உத்தியோகத்தர்களுக்கு 2008 திசெம்பர் 31 இன் 30/2008 ஆம் பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு முரணாக வழங்கப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் மன்றத்தின் நிதிசார் விளைவுகள் ரூபா 7,139,359 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 16,935,858 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 9,796,499 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. ரூபா 8,940,578 இனால் குறைவடைந்தமை மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 18,547,128 ஆல் பயிற்சிகள் மற்றும் கல்வி மீதான செலவினம் அதிகரித்தமை என்பன மேற்கூறப்பட்ட முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வு செய்தபோது 2012 ஆம் ஆண்டில் ரூபா 4,083,994 பற்றாக்குறையொன்று காணப்பட்ட போதிலும், 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் இது மிகைக்கு மாறியிருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 16,935,858 ஆன பற்றாக்குறையாக இருந்தபோதிலும், இது 2016 ஆம் ஆண்டில் ரூபா 7,139,359 க்கு குறைவடைந்திருந்தது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை சீராக்கியதன் பின்னர் 2012 ஆம் ஆண்டில் ரூபா 85,958,365 தொகையான பங்களிப்பு 2014 ஆம் ஆண்டு வரை தொடச்சியாக அதிகரித்திருந்தது. 2015 ஆம் ஆண்டில் பங்களிப்பு ரூபா 113,069,546 ஆக அதிகரித்திருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டில் இது மீண்டும் ரூபா 117,558,523 க்கு அதிகரித்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1973 இன் 31 ஆம் இலக்க இலங்கை மன்ற அதிகாரச்சட்டத்தின் 5 ஆவது பிரிவின் பிரகாரம் ஜனநாயக வாழ்க்கை முறை தொடர்பான அறிவு மற்றும் நம்பிக்கைகளைக் கட்டியெழுப்புதல் மற்றும் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும், சகல நபர்களினதும் அடிப்படை சுதந்திரத்தைப் பின்பற்றும் சர்வதேச ரீதியில் விளங்கிக்கொள்ளல் மற்றும் ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம் கௌரவத்தைக் கட்டியெழுப்புதல், பொதுமக்களுக்கு சமூக செயல்முன்னேற்றம் தொடர்பான கல்வி மற்றும் அறிவினை வழங்குவதற்கும் அவர்களிடையே அந்த அறிவை பரவச் செய்வதற்கும் தைரியத்தை வழங்குதல் மற்றும் அதனைக் கட்டியெழுப்புதல் என்பன மன்றத்தின் பிரதான நோக்கங்களாக இருந்ததுடன் அந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக மீளாய்வாண்டின் போது தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தை செயலாற்றல் அறிக்கையுடன் ஒப்பீடு செய்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஜனநாயக வாழ்க்கை முறை மற்றும் சகல நபர்களினதும் அடிப்படை சுதந்திரத்தைப் பின்பற்றி சர்வதேச அறிவு போன்ற நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக தேவையான செயற்பாடுகள் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ''நிறுவகத்தின் உத்தரவுக்கு இணங்கும் வகையில் திறன் இடைவெளிகளை குறைப்பதற்கான கல்வியை வழங்கல்'' இன் கொள்கை கருத்தின் இன் கீழ் நிறுவகத்தால் 24 பாடநெறிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 14 பாடநெறிகள் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய செயன்முன்னேற்றத்தை பரீட்சிப்பதற்கான செயன்முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளக கணக்காய்வு பிரிவால் தயாரிக்கப்பட்ட நிதிசார் மற்றும் பௌதீக செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், நிறுவகத்தின் 5 பிரிவுகளானது மீளாய்வாண்டின் போது 11 டிப்ளோமா பாடநெறிகள், 10 சான்றிதழ் பாடநெறிகள் மற்றும் 03 பயிற்சி பட்டறைகளை நடாத்துவதற்கு தீர்மானித்திருந்தது. இருந்த போதிலும், 03 டிப்ளோமா பாடநெறிகள், 05 சான்றிதழ் பாடநெறிகள் மற்றும் 02 பயிற்சி பட்டறைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

அச்சிடல் நோக்கங்களிற்காக ரூபா 204,896 முற்பணம் வழங்கிய பின்னர் 2 வருடங்கள் தொடக்கம் 9 வருடங்களுக்கிடையிலான வீச்சிலான காலப்பகுதி கடந்திருந்தபோதிலும் உரிய நோக்கத்தை செயற்படுத்துவதற்கு தவறப்பட்டிருந்தது.

### 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

2006 செப்தெம்பர் 22 இன் 30 ஆம் இலக்க மற்றும் 2016 ஏப்ரல் 25 இன் 2/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பளத்தை திருத்தியமைப்பதில், கணக்காளர் மற்றும் உள்ளக கணக்காய்வாளர் எனவே முறையே நடுத்தர மட்ட முகாமைத்துவம் மற்றும் கனிஷ்ட முகாமைத்துவ சம்பள குழுக்களில் அமர்த்தப்பட வேண்டும். எனினும், அதற்கு முரணாக, கணக்காளர் மற்றும் உள்ளக கணக்காய்வாளர் முறையே சிரேஷ்ட மட்ட மற்றும் நடுத்தர மட்ட முகாமைத்துவ பதவிகள் தொடர்பிலான சம்பள குழுக்களில் அமர்த்தப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க 2006 ஆம் ஆண்டிலிருந்து அவர்களுக்கு சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், அதிகூடிய சம்பள படி

தொடர்பில் பெறப்பட்ட மிகையான சம்பளங்கள் மற்றும் மிகையூதியங்களின் பெறுமதியை கணிப்பிடுவதற்கும் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2016 ஒக்தோபர் 25 இன் டீஎம்எஸ்/17/71/Vol/II ஆம் இலக்க கடிதத்தால் திருத்தப்பட்ட சம்பள குழுக்களை நிறுவகத்தால் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 பதவியணியின் நிர்வாகம்

நிறைவேற்று முகாமைத்துவ மட்டத்திலிருக்கின்ற 5 பதவிகளிலுள்ள 3 பதவிகளில் வெற்றிடங்களிலிருந்தமை மன்றத்தின் நிர்வாக நடவடிக்கைகளை பாதிக்கும் சாத்தியத்தன்மையுள்ளமை என அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 இன் பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம், மன்றத்தின் நோக்கங்கள், மன்றத்தி கிடைக்கத்தக்கதாகவுள்ள நடைமுறையிலுள்ள வளங்கள், முன்னைய மூன்று ஆண்டுகளின் அலுவலக கட்டமைப்பு மற்றும் நிதிசார் விளைவுகள் போன்றன 2016-2018 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன், பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) கடன்பட்டோர் கட்டுப்பாடு | கடன் அறவிடுதல் தாமதமடைந்தமை |
| (ஆ) பதவியணியினர் நிர்வாகம் | ஆட்சேர்ப்பு திட்டத்துடன் முறைமைப்படுத்தாமை. |
| (இ) வருமானக் கட்டுப்பாடு | வருமானத்தை சரியாக கணிப்பிடாமை மற்றும் அரங்கத்தை மற்றும் தங்குமிட வசதிகளை கடன் அடிப்படையில வழங்கல். |